# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை - 2024 சனவரி

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

---

## பகுதி A

### வினா இல. 01

இந்த வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25, இது உப வினாக்களை உள்ளடக்கியுள்ளது. இங்கு பாடத்திட்டத்திலுள்ள உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் என்ற பாடப்பரப்பிலுள்ள பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது. மிகச் சில பரீட்சார்த்திகளுக்கு மாத்திரமே முழுமையாக புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு 10 – 20 வரையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

விடைகளிலிருந்து கீழ்வரும் பொதுவான பலவீனங்களும் தவறுகளும் அவதானிக்கப்பட்டன:

**1.1** இந்த வினா கிரயக் கணக்கீட்டு எண்ணக்கரு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகள் கிரயக் கணக்கீடு தொடர்பான சரியான கூற்றினை அடையாளங் காணத் தவறியிருந்தனர்.

**1.2** இந்த வினாவானது தரப்பட்ட தகவல்களைக் கொண்டு, உற்பத்திக் கம்பனியொன்றின் உயர்ந்தபட்ச இருப்பு மட்டத்தைக் கணிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர் ஆயினும் மிகச் சில பரீட்சார்த்திகள் இதற்காக ஒதுக்கிய புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். அவர்களுக்கு உயர்ந்தபட்ச இருப்பு மட்டத்தைக் கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் சரியான சூத்திரம் பற்றித் தெரிந்திருக்கவில்லை என்பதை அவதானிக்கக்டியதாக இருந்தது.

**1.3** இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் பண்புகள் பற்றிப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர்.

**1.4** இவ்வினா ஒரு கம்பனியின் மேந்தலைக் கிரய உறிஞ்சல் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. மேந்தலைக் கிரய உறிஞ்சல் பற்றிய சில பரீட்சார்த்திகளின் அறிவு திருப்திகரமாக இருக்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. அவர்கள் மேந்தலை உறிஞ்சல் வீதத்தைக் கணிப்பிடும்போது பாதிடப்பட்ட கிரயத்திற்குப் பதிலாக உண்மையான மேந்தலைக் கிரயத்தைப் பயன்படுத்தி யிருந்தனர்.

**1.5** இங்கு, சிக்கனக் கட்டளைக் கணிய சூத்திரத்தில் பயன்படுத்தப்படும் எடுகோள் ஒன்றைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**1.6** இங்கு இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படை அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்த அதே வேளை மிகச் சில பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர்.

**1.7** இங்கு 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இன் ஏற்பாடுகள் இரண்டினை (02) குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தேவையான விடைகளை எழுதியிருந்தனர்.

**1.8** பங்குடமை வியாபாரமொன்று தொடர்பில் தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அர்ப்பணிப்பு விகிதத்தைக் கணிப்பிடும்படி கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் அர்ப்பணிப்பு விகிதத்தைச் சரியாகக் கணித்திருந்த போதிலும், பெரும்பாலானவர்களிடம் இந்தப் பாடப்பரப்பு பற்றிய அறிவு போதியதாக இல்லாததால் அவர்களால் கணிப்பிட முடியவில்லை.

**1.9** தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில், தனியார் கம்பனியொன்றினால் செலுத்தப்பட்ட நிகர சம்பளத்தைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இங்கு, சில பரீட்சார்த்திகள் செலுத்தப்பட்ட நிகர சம்பளத்தைச் சரியாகக் கணித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் மொத்தச் சம்பளத்திலிருந்து வரிக் கழிப்பனவுகளைக் கழித்திருக்கவில்லை. அதேபோன்று சிலர் நிகர சம்பளத்தைக் கணிக்கும்போது 3% ETF இனைக் கழித்திருந்தனர்.

**1.10** இவ்வினா LKAS 10 தொடர்பான அடிப்படை அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு LKAS 10 இன்படி, சீராக்கல் நிகழ்வுகளுக்கான மூன்று உதாரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இதனைப் பல தடவைகள் நாங்கள் பரீட்சித்திருந்த போதிலும் பெரும்பாலானவர்களிடம் சீராக்கல் நிகழ்வுகள் பற்றிய அறிவு காணப்பட்டிருக்கவில்லை. சிலர், வெளிப்படுத்தப்படும் பங்கிலாபத்தைக்கூட சீராக்கல் நிகழ்வொன்றாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

### வினா இல. 02

கணக்கீட்டுப் பதிவுகளை முறையாகப் பேணாத வணிக உரிமமொன்றின் மூலதன (உரிமையாண்மை) மீதி மற்றும் நிகர இலாபத்தைக் கணிப்பிடுவதை இந்த வினா பரீட்சித்திருந்தது. சில பரீட்சார்த்திகள் உரிமையாண்மை மீதியைச் சரியாக கணிப்பிட்டிருக்கவில்லை.

சில பரீட்சார்த்திகள் கீழ்வரும் காரணங்களால் சரியாக செயற்பட்டிருக்கவில்லை :

(1) அவர்கள் இறுதி கடன் அட்டை வருமதிகளைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. இருப்பினும், இறுதி கடனட்டை வருமதிகளைக் கவனத்திற் கொள்ளாது ஆண்டிற்கான நிகர இலாபத்தைப் பயன்படுத்தி உரிமையாண்மையைக் கணிப்பிட்டிருக்க முடியும்.

(2) இலாபச் சூத்திர முறையைப் பயன்படுத்தி, இறுதி உரிமையாண்மையைக் கணிப்பிடும்போது சில பரீட்சார்த்திகளால் ஆரம்ப உரிமையாண்மை சரியாகக் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(3) மொத்த இலாப விகிதத்தைச் சரியாகக் கவனத்திற் கொள்ளாததால் விற்பனைக் கிரயம் தவறாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(4) ஆண்டிற்கான தேய்மானம் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 03

இந்த வினா பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் மற்றும் இலாப அல்லது நட்ட பகிர்வுக் கணக்கு ஆகியவற்றை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு போதுமானளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

ஆனால் சில பரீட்சார்த்திகள் கீழ்வரும் காரணங்களால் நன்றாக விடையளித்திருக்கவில்லை :

(1) கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படாத கட்டட வாடகை மற்றும் கடன் வட்டி என்பன சில பரீட்சார்த்திகளால் நிகர இலாபம் ரூபா 8 மில்லியனுக்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் ஒவ்வொரு பங்காளருக்குமான இலாபப் பங்கு சரியாக இருக்கவில்லை.

(2) சில பரீட்சார்த்திகளால் கட்டட வாடகையும் கடன் வட்டியும் நடைமுறைக் கணக்குகளில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(3) சிலர் ஆரம்ப மூலதன மீதிகளையும்கூட நடைமுறைக் கணக்கிற்கு கவனத்திற் கொண்டிருந்தனர்.

(4) சிலர் வருடாந்த சம்பளத்தைக் கவனத்திற் கொள்வதற்குப் பதிலாக பங்காளர்களின் மாதாந்தச் சம்பளத்தைக் கவனத்திற் கொண்டிருந்தனர்.

(5) நடைமுறைக் கணக்குகளிலுள்ள வரவு மற்றும் செலவு மீதிகள் சரியாகக் கருத்திற் கொள்ளப்பட வில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 04

இவ்வினா இலாப நோக்கற்ற அமைப்பொன்றின் வருமான, செலவினக் கணக்கையும் கொள்ளல், கொடுத்தல் கணக்கையும் தயாரிப்பதைக் கேட்டிருந்தது.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு :

(1) சில பரீட்சார்த்திகளால் அங்கத்துவச் சந்தாக் கணக்கு சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அந்தக் கணக்கிற்கான வரவு மற்றும் செலவுப் பதிவுகள் சரியாக பதியப்பட்டிருக்கவில்லை.

(2) அங்கத்துவச் சந்தாவைக் கணிப்பிடும்போது, ஆண்டின் காலப்பகுதியில் புதிதாக இணைந்து கொண்ட 10 வைத்தியர்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(3) சில பரீட்சார்த்திகளால் ஆண்டிற்கான தேய்மானம் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை என்பதுடன் வருமான, செலவினக் கணக்கிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(4) வழங்கப்பட்ட மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களுக்கான கிரயத்தைக் கணிப்பிடும்போது ஆரம்ப மற்றும் இறுதி இருப்புகள் சரியாகச் சீராக்கம் செய்யப்படவில்லை.

(5) கிடைக்கப்பெற்ற நன்கொடை சரியாகச் சீராக்கம் செய்யப்படவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 05

**(A)** இங்கு, ஒவ்வொரு பிரிவுக்கும் மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கப்பட்டு, பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் கூற்றினைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் திணைக்களங்களுக்கு நேரில் பொருள்களை ஒதுக்காது விட்டிருந்தனர். அத்துடன் ஒரு சிலர் சேவைப் பிரிவுக் கிரயத்தை உற்பத்திப் பிரிவுகளுக்கு பகிர்ந்திருக்கவில்லை.

**(B)** இவ்வினா ஒவ்வொரு பிரிவுக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதத்தைக் கணிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலானவர்கள் மிகவும் திருப்திகரமாக விடையளித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 06**

**(A)** தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில், குறித்த வேலை ஒன்றுக்கு வசூலிக்கப்பட வேண்டிய விலையைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இருப்பினும், சில பரீட்சார்த்திகளால் விற்பனை விலை மீதான இலாப எல்லையின் கணிப்பீடு செய்யப்படவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**(B)** இங்கு, ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் மொத்த உழைப்பைக் கணிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்த உழைப்பைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. அவர்கள் மிகையூதியத்தையும் சரியாகக் கணிப்பிடவில்லை. மிகையூதியமானது சேமிக்கப்பட்ட நேரத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட வேண்டும். மிகையூதியத்தைக் கணிப்பிடும்போது, அவர்கள் பிழையான சேமிக்கப்பட்ட நேரத்தைப் பிரயோகித்திருந்தனர்.

அதிகளவான பரீட்சார்த்திகள் மிகையூதியத் தொகையைச் சரியாகக் கணிப்பிடாததை அவதானிக்க முடிந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.**

## <u>பகுதி C</u>

**வினா இல. 07**

இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்குமாறு கேட்டிருந்ததுடன் இது **(a), (b)** என 2 பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. **பகுதி (a)** ஆனது முற்றடக்க வருமானக் கூற்று தயாரிப்பதையும் **பகுதி (b)** ஆனது நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பதையும் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் சிலரால் அதற்கான முழுப் புள்ளிகளையும் பெற முடிந்திருந்தது.

கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு :**

(1) வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்று ஆகியவற்றுக்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவங்களை மிகச் சில பரீட்சார்த்திகள் பின்பற்றியிருக்கவில்லை.

(2) வருமான வரிச் சீராக்கங்கள் சில பரீட்சார்த்திகளால் சரியாக மேற்கொள்ளப்படவில்லை.

(3) சில பரீட்சார்த்திகளால் மோட்டார் வாகன விற்பனைக்கான கணக்கீட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால், மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபம் சில பரீட்சார்த்திகளால் கணக்கிடப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் விற்பனை மீதான இலாபத்தைச் சரியாக சீராக்கம் செய்திருந்த போதிலும், புதிய மோட்டார் வாகனத்தின் தேய்மானத்தை சரியாக கவனத்திற் கொண்டிருக்கவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் செய்முறைகளை இணைத்திருக்கவில்லை என்பதால், செய்முறைகளுக்காக ஒதுக்கப்பட்ட சில மேலதிக புள்ளிகளை அவர்களால் பெற முடியவில்லை.

(5) இருப்புகள், கிரயம் அல்லது NRV இதில் எது குறைந்ததோ அதில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். இதனைச் சில பரீட்சார்த்திகள் கவனத்திற் கொள்ளவில்லை.

(6) சில பரீட்சார்த்திகளால் ஆண்டுடன் தொடர்புடைய வட்டி கவனத்திற் கொள்ளப்படவில்லை.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு :**

(1) மோட்டார் வாகனத்திற்கான சேர்ப்பனவுகள் சரியாகக் கவனத்திற் கொள்ளப்படவில்லை. ஆண்டிற்கான தேய்மானம் சரியாகக் கணிப்பிடப்படாத காரணத்தால், முன்கொணரற் பெறுமதி தவறானதாக இருந்தது.

(2) சில பரீட்சார்த்திகள் அறவிடமுடியாக் கடன்கள் மற்றும் அறவிட முடியாக் கடன்களுக்கான ஏற்பாடுகளை வியாபார வருமதிகளிலிருந்து கழித்திருக்கவில்லை.

(3) நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சரியான வகைப்படுத்தல்கள் பிரயோகிக்கப்படவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

- - - -

**<u>பரீட்சையில் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்</u> :**

**(1)** பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தை நன்கு படித்து அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**(2)** செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணத்தை விளங்கிக்கொண்டு, வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச்சொல் செவ்வை நிரலின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்க பயிற்சி செய்தல் வேண்டும்.

**(3)** கடந்தகால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைப் படித்து, குறைந்தது 2 – 3 பரீட்சை வினாத்தாள்களைப் பயிற்சி செய்து, வினாக்கள் எந்த அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன என்பதை விளங்கிக்கொள்ள முயற்சி செய்தல் வேண்டும்.

**(4)** பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதுவதற்கு முன்னர், கடந்தகால வினாத்தாள்களை உரிய நேரத்தில் செய்து முடித்து பயிற்சி பெற வேண்டும். இது பரீட்சையில் நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.

**(5)** பரீட்சார்த்திகள் பரீட்சையை தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

**(6)** பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர், பரீட்சை வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.

**(7)** வினாவை விளங்கிக் கொள்வதற்காக பரீட்சார்த்திகள் பரீட்சையின்போது தெளிவான, சமநிலையான மனநிலையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் வினாத்தாளில் உள்ள வினாக்களுக்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளையே வழங்குதல் வேண்டும்.

**(8)** பரீட்சார்த்திகள் தரப்பட்ட புள்ளிகளின் அடிப்படையிலேயே வினாக்களுக்கான நேரத்தை ஒதுக்குதல் வேண்டும். இதன் மூலம் வினாத்தாளில் தரப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் வினைத்திறனான முறையில் பரீட்சார்த்திகளால் விடையளிக்கக்கூடியதாக இருக்கும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், தேவைப்படுத்தப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பொருத்தமானவாறு இலக்கங்கள் இடப்பட்டுள்ளனவா என்பதையும் ஒருமுறைக்கு இருமுறை பரீட்சித்துக்கொள்ள வேண்டும்.

- * * * -